<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

**அசல் வழக்கு எண். 24/2025**

**வா.சா.2 – திலகவதி**

<u>03–11–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு படிக்க தெரியாது. பிரமாணவாக்குமூலத்தின் உள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல நேரடியாக தெரியும். பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லிதான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது மகன் எப்போது Studio வைத்து இருந்தார் என்றால் வருடம் தெரியாது. வீட்டில் இருந்து எனது மகனு புகைப்படம் எடுக்க சென்றபோது அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 12 வகுப்பு முடித்தபோது சென்றார் வயது தெரியாது. ஜெயலச்சுமிக்கும் எனது மகனுக்கும் திருமணமானபோது என் மகனின் வயது என்ன என்றால் 25 வயது இருக்கும். எனது கருவம்பாளையத்தில் முத்துசாமி வீதியில் குடியிருந்தார் என்றால் சரியல்ல.

2. எனது மகனுக்கு உடல்நிலை சரியில்லாமல் எனது மகனை தேவிதான் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரிதான். அதன் பிறகு தான் எனது மகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விபரம் தெரிந்து நாங்கள் மருத்துவமனை சென்றோம் என்றால் சரிதான். எனது மகன் இறப்பிற்கு பிறகு ஜெயலச்சுமி தேவி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. அவ்வாறு புகார் கொடுக்கப்பட்டு போலீசார் விசாரணையில் எனது மகனின் மனைவி தேவிதான் என்று முடிவு செய்து எனது மகனின் பிரேதத்தை தேவியிடம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. எனது மகனின் காரியத்தை தேவிதான் செய்தார் என்றால் சரியல்ல.

3. எனது மகனும் தேவியும் கணவன் மனைவியாக வாழ்ந்ததால்தான் லாவண்யா என்று ஒரு மகள் உள்ளார் என்றால் சரியல்ல. லாவண்யா எனது மகனுக்கு பிறந்த குழந்தை அல்ல. லாவண்யா பிறந்ததர்க்கு நானோ ஜெயலச்சுமியோ எந்த ஒரு ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீடு எனது கணவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதனை எனது மகனுக்கு உயில் எழுதிவைத்தோம். அந்த வீட்டிற்கு தேவியும் லாவண்யாவும் வாரிசாக வருவார்கள் என்பதால் நானும் 1ம் வாதியும் சேர்ந்து பொய்சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

4. எனது மகன் இறக்கும்வரை தேவியுடன் தான் வாழ்ந்தார் என்றால் சரியல்ல. எனது மகன் ஆறுமுகத்திற்கும் தேவிக்கும் 1997ல் திருமணம் ஆகிவிட்டது என்றால் தேரியாது. எனது மகனுக்கும் தேவிக்கும் ஏற்ப்பட்ட குடும்ப வாழ்க்கையின் பலனாக தான் லாவண்யா பிறந்தார் என்றால் சரியல்ல. எனது மகனின் சட்டப்படியான மனைவி தேவி என்றால் சரியல்ல. நானும் ஜெயலச்சுமியும் எனது மகன் உயிருடன் இருந்தபோது எனது மகன் வேறு பெண்களுடம் தொடர்பில் இருந்ததாக போலீசில் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. நான் தற்போது ஜெயலச்சுமியுடன் தான் இருக்கிறேன். ஜெயலச்சுமி சொல்லிக்கொடுத்தபடி அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகனின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது நடத்தையை பொய்யாக பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

5. எனது மகனுக்கு முதலில் எந்த முவரிக்கு குடும்ப அட்டை கொடுத்தார்கள் என்றால் என் வீட்டு முகவரிக்குதான் கொடுத்தார்கள். எனது மகனுக்கு முதல் முதல் எந்த முவரிக்கு குடும்ப அட்டை கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை என்றும், அனைத்து விபரங்களும் 1ம் வாதி சொல்லிதான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன், தேவி,

லாவண்யாவிற்கு முதலில் குடும்ப அட்டை கொடுக்கப்பட்டு அவர்கள் மூவறும் கருவம்பாளையத்தில் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் எனக்கு நங்கு தெரிந்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

(4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டார். )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.03 11:06:09 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.